# டிசம்பர் – 23 – சனி

## புனித ஜோன் கன்டி

**ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச்செய்தருளும்: திபா. 25:4**

## முதல் வாசகம் : மலாக்கியர் 3 : 1 – 4, 4 : 5 – 6

படைகளின் ஆண்டவர் கூறுவதாவது: "இதோ! நான் என் தூதனை அனுப்புகிறேன். அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார் அப்பொழுது, நீங்கள் தேடுகின்ற தலைவர் திடீரெனத் தம் கோவிலுக்கு வருவார். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் உடன்படிக்கையின் தூதர் இதோ வருகிறார்" என்கிறார் படைகளின் ஆண்டவர். ஆனால் அவர் வரும் நாளைத் தாங்கக் கூடியவர் யார்? அவர் தோன்றும்போது நிற்க வல்லவர் யார்? அவர் புடமிடுகிறவரின் நெருப்பைப் போலும் சலவைத் தொழிலாளியின் சவர்க்காரத்தைப் போலும் இருப்பார். அவர் புடமிடுபவர் போலும் வெள்ளியைத் தூய்மைப்படுத்துபவர்போலும் அமர்ந்திருப்பார். லேவியின் புதல்வரைத் தூய்மையாக்கிப் பொன், வெள்ளியைப்போல் அவர்களைப் புடமிடுவார். அவர்களும் ஆண்டவருக்கு ஏற்புடைய காணிக்கை கொண்டு வருவார்கள். அப்பொழுது பண்டைக் காலத்தில் முன்னைய ஆண்டுகளில் இருந்தது போல் யூதாவின் காணிக்கையும் எருசலேமின் காணிக்கையும் ஆண்டவருக்கு உகந்தனவாய் இருக்கும். இதோ! பெரியதும் அச்சத்தைத் தோற்றுவிப்பதுமான ஆண்டவரின் நாள் வருமுன், இறைவாக்கினர் எலியாவை நான் உங்களிடம் அனுப்புகிறேன். நான் வந்து உலகைச் சபித்துத் தண்டிக்காதபடி, அவர் பெற்றோரின் உள்ளங்களைப் பிள்ளைகளிடத்தும், பிள்ளைகளின் உள்ளங்களைப் பெற்றோரிடத்தும் திருப்புமாறு செய்வார்."

**பதில்பாடல் :** தலை நிமிர்ந்து நில்லுங்கள் உங்கள் மீட்பு நெருங்கி வருகிறது.

## நற்செய்தி : லூக்கா 1 : 57 - 66

அக்காலத்தில் எலிசபெத்துக்குப் பேறுகாலம் நெருங்கியது. அவர் ஒரு மகனைப் பெற்றெடுத்தார். ஆண்டவர் அவருக்குப் பெரிதும் இரக்கம் காட்டினார் என்பதைக் கேள்விப்பட்டுச் சுற்றி வாழ்ந் தோரும் உறவினரும் அவரோடு சேர்ந்து மகிழ்ந்தனர். எட்டாம் நாளில் அவர்கள் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வந்தார்கள் செக்கரியா என்ற அதன் தந்தையின் பெயரையே அதற்குச் சூட்ட இருந்தார்கள். ஆனால் அதன் தாய் அவர்களைப் பார்த்து, "வேண்டாம், அதற்கு யோவான் எனப் பெயரிட வேண்டும்" என்றார். அவர்கள் அவரிடம், "உம் உறவினருள் இப்பெயர் கொண்டவர் எவரும் இல்லையே" என்று சொல்லி, "குழந்தைக்கு என்ன பெயரிடலாம்? உம் விருப்பம் என்ன?" என்று தந்தையை நோக்கிச் சைகை காட்டிக் கேட்டார்கள். அதற்கு அவர் எழுது பலகை ஒன்றைக் கேட்டு வாங்கி, "இக்குழந்தையின் பெயர் யோவான்" என்று எழுதினார். எல்லாரும் வியப்படைந்தனர். அப்பொழுதே அவரது வாய் திறந்தது. நா கட்டவிழ்ந்தது. அவர் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார். சுற்றி வாழ்ந்தோர் அனைவரும் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு அஞ்சினர். இச்செய்தி யூதேய மலை நாடெங்கும் பரவியது. கேள்விப்பட்டவர்கள் யாவரும் இச்செய்தியைத் தங்கள் உள்ளங்களில் இருத்தி, "இக்குழந்தை எப்படிப்பட்டதாக இருக்குமோ?" என்று சொல்லிக் கொண்டார்கள். ஏனெனில் அக்குழந்தை ஆண்டவருடைய கைவன்மையைப் பெற்றிருந்தது.

**தியானம்:** இறைமகனின் பிறப்பு விழாவிற்கு இரண்டே நாட்கள் இருக்கையில் இன்றைய வாசகங்கள் இறைவனின் பிள்ளைகளாகிய எமக்கு, தமது மீட்பின் திட்டத்தில் ஏற்கனவே ஒரு பங்களிப்பினை நிறைவேற்ற, இறை மகனது மறுவருகையை ஆயத்தம் செய்ய, இறைவன் திட்டமிட்டு, தயாரித்து வைத்துள்ளார் என்பதனை உறுதிப்படுத்துகின்றன. அவ்வாறே நாம், இறைவனது மீட்பின்திட்டத்தில் அவரது மறு வருகையில், என்ன பங்களிப்பினைச் செலுத்த இருக்கின்றோம் என்பதனையும் ஆராய்ந்து சிந்திக்க எம்மை அழைத்து நிற்கின்றன. இன்றைய முதல் வாசகத்தில் ஆதியிலே இறைவன் இஸ்ராயேல் மக்களை மீட்டெடுத்து "இதோ! நான் என் தூதனை அனுப்புகிறேன். அவர் எனக்கு முன்வழியை ஆயத்தம் செய்வார்" (மலாக்கி3:1-4) என தமது மக்களை ஆயத்தப்படுத்துவதனை நாம் காண்கின்றோம். அதே போன்று இன்றைய நற்செய்தியில் "நம்மோடு இருக்கும் கடவுள்" (இம்மானுவேல்) வருகைக்காக புனித திருமுழுக்கு அருளப்பரது பிறப்பின் ஊடாக ஏற்பாடுகளைச் செய்வதனை நாம் காணுகின்றோம். இறைவனின் மீட்பின் திட்டத்திற்கான தமதுபங்களிப்பினை தூய சக்கரியாவும், அவரது மனைவி தூய எலிசபெத்தும் பணிவோடு உணர்ந்து ஏற்றுக்கொண்டதால் அவர்களை இன்றும் அன்னையாம் திருச்சபை மகிமைப்படுத்தி வருகின்றது. இறைவனது அழைப்பு எவருக்கு எவ்வேளையில் வருமென திட்டவட்டமாக தெரிந்து கொள்ளமுடியாது என்பது உண்மை. எனினும், எமக்கு விடுக்கப்படும் இறை அழைத்தலுக்கு நாம் எவ்வேளையிலும் தயாராக இருக்க வேண்டும் என்பதனை நற்செய்தி தெளிவுபடுத்துகின்றது. இறைமகனின் பிறப்பு விழாவிற்கு தயார் செய்யும் நாம் இத்திருவருகைக் காலத்தில் இறை அழைத்தலை ஏற்றுக்கொள்ளும் நல்ல மனோநிலை எம்முள்ளே உருவாக, இறைமகன் இயேசுவின் மறுவருகைக்கான பாதையை ஆயத்தம் செய்யும் பணியில் எம்மையும் இணைத்துக்கொள்ள ஆயத்தமாக நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்து எம்மையும் உரிய முறையில் தயார் செய்வோம். மந்தை மேய் மனிதருக்கு நற்செய்தி அறிவித்த மனுமகனாய் வந்துதித்த மதுர பாலகனே ஆராரோ….ஆராரோ….ஆரீராரோ - ஆமென்.